

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி தி.மு.கழக வேட்பாளர்மா.சுப்பிரமணியன் காலை 7 மணிக்கு தொடங்கி 172வது வார்டு முழுவதும் வாக்குச் சேகரித்தார். இந்நிகழ்வில் பகுதி கழக செயலாளர் இரா.துரைராஜ், வட்ட கழக செயலாளர் நேருநகர் எஸ்.பாட்சா, காங்கிரஸ் ஜோதிபொன்னம்பலம், தே.மு.தி.க ஆனந்தன், ம.நீ.ம. கதிர், எஸ்.டி.பி.ஐ. அபுதாகிர், பிலால், இ.யூ.மு. லீக் கவுஸ் ஃபேக், த.மு.மு.க சாகுல்ஹமீது, அப்துல் ஜபார், சி.பி.ஐ. சிவா, சி.பி.எம்.வேல்முருகன், உள்ளிட்ட ஏராளமான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியினர் பங்கேற்றனர்.



சென்னை கிழக்கு மாவட்டம் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் துறைமுகம் சட்டமன்றத் தொகுதி 59 (அ) வட்டத்தில் உள்ள சத்தியவாணி முத்து நகரில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளருமான பி.கே.சேகர்பாபு வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரித்தார். இந்த வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சியில் பகுதிக் கழகச் செயலாளர் எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர், இரா.நரேந்திரன், இசட்.ஆசாத், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, ரஞ்சித் விஜயாலயன், பி.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம்.விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: வே.பா.பிரபாகரன். எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், லண்டன் க.முருகன் மற்றும் கழக நிர்வாகிகள் தோழமைக் கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

### இன்று தமிழ்ப் புதல்வன்... நாளை நான் முதல்வன்...

# ‘திராவிட மாடல்’ அரசின் நலத்திட்டங்களுக்கு சான்றுரைத்த இளைஞர்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. வாழ்த்தி தென்காசியில் தேர்தல் பரப்புரை!

**தென்காசி, ஏப்.12-**

**தென்காசி மாவட்டம் வாசுதேவ நல்லூர் சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளார் ராஜாவுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்கு கேட்டு ஏப்ரல் 11 ஆம் தேதி இராய கிரி, வாசுதேவநல்லூர், புளியங் குடி உள்ளிட்ட பகுதிகளில் திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற திமுக குழுத் தலை வருமான கனிமொழி கருணாநிதி எம்பி. பரப்புரை செய்தார்.**



அப்போது பேசிய அவர்,

”வாசுதேநல்லூர் வேட்பாளராக மாவட்டச் செயலாளர் ராஜாவை நம் முதல்வர் உங்களிடம் ஒப்ப டைத்திருக்கிறார். ராஜா உங்க ளோடு இருந்து உங்களோடு பணி யாற்றக் கூடியவர்.

இப்பகுதியில் புதிதாக சிலர் வந்து எங்களுக்கு வாக்களியுங்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார் கள். அவர்களுக்கும் சாதாரண சாமானியர்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. இந்த மண் ணில் பாஜகவுக்கு இடம் கொடுத்து விடக் கூடாது என்பதில் நாம் தெளி வாக இருக்க வேண்டும். தமிழ்நாடு அமைதிப் பூங்காவாக இருக்கிறது. அதனால்தான் பொரு ளாதார ரீதியாக முன்னேற்றம் கண்டுவருகிறது.

ஒரு கோயில் நன்றாக இருக்க வேண்டும், ஒரு மசூதி நன்றாக இருக்க வேண்டும், ஒரு தேவால யம் நன்றாக இருக்க வேண்டும் என்பதுதான் தமிழ்நாட்டில் இருக் கும் நமது எண்ணம்.

ஆனால் பா.ஜ.க.வுக்கு கொஞ் சம் இடங்கொடுத்தால் கூட... எந்த கோவிலை வைத்து என்ன பிரச்சி னையை உருவாக்கலாம், எந்த மதத்துக்கு இடையே சண்டையை உருவாக்கலாமென அவர்கள் தொடர்ந்து முயற்சித்துக் கொண்டே இருக்கிறார்கள். அப்படி சண்டை உருவானால் நாம் யாருமே நிம்ம தியாக இருக்க முடியாது. பெரும் பான்மையும் நிம்மதியாக இருக்க முடியாது, சிறுபான்மையும் நிம்ம தியாக இருக்க முடியாது. நம் பிள் ளைகள் வெளியே போய்விட்டு வருமா? தொழில் இங்கே ஆரம் பிப்பார்களா? முடியாது.

இன்று நம் முதலமைச்சர் கல் லூரிகளுக்கு வாருங்கள் மாதம் ஆயிரம் ரூபாய் தருகிறேனென்று தந்துகொண்டிருக்கிறார். அடுத்து ஆட்சிக்கு வந்து அதை 1500 ரூபா யாக அதிகரிக்க இருக்கிறார்.

நெல் கொள்முதல் குவிண்டா லுக்கு 3500 ஆக உயர்த்தி வழங் கப்படும். கரும்பு கொள்முதல் விலையாக 4500 ஆக உயர்த்தி வழங்கப்படும். பால் கொள்முதல் லிட்டருக்கு 5 ரூபாய் உயர்த்தி வழங்கப்படும்.

பா.ஜ.க. அடிக்கடி வந்து இங்கே பிரச்சாரம் செய்வார்கள். அந்த திட் டம் கொண்டுவந்தோம், இந்த திட் டம் கொண்டுவந்தோம் என்று நாம் கொண்டுவந்த திட்டத்தின் மீது ஸ்டிக்கர் ஒட்டுவார்கள். உதா ரணத்துக்கு பிரதமர் வீடு கட்டும் திட்டம். ப்ரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டம். பெயர் வாயில் நுழையாது.

பிரதமர் வீடு கட்டும் திட்டத்துக்கு காசு யார் கொடுக்கிறார்? முத்து வேல் கருணாநிதி ஸ்டாலின் தலை மையிலான நம் மாநில அரசுதான் 61% நிதியை கொடுக்கிறது. மீதி 39% நிதியைதான் ஒன்றிய அரசு கொடுக்கிறது. உண்மையிலேயே அது முதல்வர் வீடு கட்டும் திட்டம் தான். ஆனால் அவர்கள் ஸ்டிக் கரை வந்து ஒட்டிவிட்டுப் போகிறார் கள். நம் முதல்வர் பெருந்தன்மை யோடு இருக்கிறார்.

இதை நீங்கள் புரிந்துகொண்டு வாக்களிக்க வேண்டும். 100 நாள் திட்டத்தை ஏன் மோடி நிறுத்தினார் என்று ஓட்டு கேட்டு வரும் பாஜகவி னரிடம் கேளுங்கள்.

ஆனால் நமது திராவிட மாடல் அரசு எத்தனை திட்டங்களை தீட்டி யிருக்கிறது. புதுமைப் பெண், தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழ் கல் லூரிகளில் பயிலும் மாணவர்க ளுக்கு மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கொடுத்துக்கொண் டிருக்கிறார்” என்று பரப்புரை செய் துகொண்டிருக்கும்போதே, கூட்டத் தில் இருந்து, ‘அக்கா... நான் மாசம் ஆயிரம் ரூபாய் வாங்கிக்கிட்டிருக் கேன்’ என்று ஒரு மாணவர் குரல் எழுப்ப, ‘தம்பி என்ன படிக்கிறீங்க?’ என்று கேட்டார் கனிமொழி .

‘கம்ப்யூட்டர் இன்ஜினியரிங் அக்கா’ என்று அந்த இளைஞர் பதில் சொல்ல, ’ உங்க பேர் என் னப்பா?’ என்று கேட்டார் கனி மொழி. ‘ஜெகன்குமார் அக்கா’ என்று அவர் சொல்ல, ‘தம்பி ஜெகன் குமார் அவர்கள் உங்கள் கண் முன்பே தமிழ்ப் புதல்வன் திட்டத்தில் மாதம் ஆயிரம் ரூபாய் பெற்றுக்கொண்டிருக்கக் கூடிய இளைஞர். அவர் நான் முதல்வன் திட்டத்திலும் பயன்பெற்று வாழ்வில் சிறந்து விளங் கிட வாழ்த்துகிறோம்’ என்று திராவிட மாடல் அர சின் திட்டத்தால் பயன் பெற்று வரும் அந்த இளை ஞரை பரப்புரை வாகனத் தில் இருந்தபடியே வாழ்த் தினார் கனிமொழி கருணாநிதி எம்பி.

### திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியில்

# அ.தி.மு.க. - த.வெ.க.வினர் 400 பேர் கழகத்தில் இணைந்தனர்!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு முன்னிலையில்!

*திருவண்ணாமலை, ஏப். 12-*

*திருவண்ணாமலை சட்ட மன்றத் தொகுதியைச் சேர்ந்த தச்சம்பட்டு, அல்லி கொண்டாப்பட்டு, சின்னக் கல்லப்பாடி, பறையம் பட்டு, மேலத்திக்கான், தலையாம்பள்ளம் ஆகிய ஊராட்சிகளிலிருந்து 400க்கும் மேற்பட்ட அ.தி.மு.க., த.வெ.க.வினர் அக்கட்சிகளிலிருந்து விலகி, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு முன் னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.*

*10.04.2026 வெள்ளிக்கி ழமை காலை 9.30 மணிக்கு திருவண்ணா மலை, திருக் கோயிலூர் ரோடு, சாரோ னில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், திருவண்ணாமலை தொகுதி யைச் சேர்ந்த அ.தி.மு.க., த.வெ.க.வினர் அக்கட்சிகளி லிருந்து விலகி தி.மு.க.வில் இணையும் நிகழ்ச்சி நடை பெற்றது.*

*திருவண்ணாமலை ஒன்றியம், தச்சம்பட்டு ஊராட்சி, அ.தி.மு.க.வைச் சேர்ந்த முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் சி.அச்சு தன், முன்னாள் தொடக்க வேளாண்மை சங்கத் தலை வர் இராஜலட்சுமி ஆகி யோர் தலைமையிலும், மேலத்திக்கான் ஊராட்சி, கீழ் அணைக்கரையைச் சேர்ந்த அ.தி.மு.க.வைச் சேர்ந்த முன்னாள் ஒன்றியக் குழு உறுப்பினர் ரவிச்சந்தி ரன் தலைமையிலும், சின் னக்கல்லப்பாடி அ.தி.மு.க. வைச் சேர்ந்த முன்னாள் ஊராட்சிமன்றத் தலைவர் சக்கரவர்த்தி தலைமையிலும்,*

*தலையாம்பள்ளம் அ.தி.மு.க.வைச் சேர்ந்த கே.குமார் தலைமையிலும், மேலத்திக்கான் பானுமதி, மகேஸ்வரி, கற்பகம், சாரதா, முனியம்மாள், லலிதா, பழனியம்மாள், எஸ்.கோவி ந்தன், கோபால், கே.ஹரிஷ் உட்பட 100 பேரும், தச்சம் பட்டு த.வெ.க.வைச் சேர்ந்த பி.விநாயகம், பி.லோகனா தன், டி.ராஜாராம், டி.சுப்பி ரமணி, ஜி. வெங்கடேசன், டி.அபிஷேக், கே.லட்சு மணன் உட்பட 50பேருக் கும், தச்சம்பட்டு க.பாட்டம் மன், பா.சங்கர், த.முருகன், பி.ஏழுமலை, வே. கோவிந் தன், இரா.பிரகாஷ், பொ. சங்கர் உட்பட 50பேரும்,*

*தச்சம்பட்டு ஊராட்சி மீனாட்சி, பிரேமா, பிரபா, கனகவள்ளி, ரேணுகா, தமி ழரசி, அம்மு உட்பட 50 பேரும், அல்லிகொண்டாப் பட்டு நவீன், ஜார்ஜ், தினேஷ், பிரவீன், தாமஸ், நெல்சன், ஆனஸ்ட் உட்பட 100 பேரும் அக்கட்சிகளிலி ருந்து விலகி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.*

*தி.மு.க.வில் இணைந்த அனைவருக்கும் பொதுப்ப ணித்துறை அமைச்சர் எ.வ. வேலு கைத்தறி ஆடை அணிவித்து வரவேற்றார்.*

*நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாவட்டப் பொருளாளர் எஸ்.பன்னீர் செல்வம், மாநகரச் செயலா ளர் ப.கார்த்திவேல்மாறன், மாவட்ட துணைச் செயலா ளர் பிரியா விஜயரங்கன், மாவட்ட துணைச் செயலா ளர் விஜயலட்சுமி ரமேஷ், முன்னாள் ஊராட்சி தலை வர் ஏ.முத்துகுமார், மாநில தொ.மு.ச. செயலாளர் க.சௌந்தரராசன், மாநில அமைப்புசாரா தொ.மு.ச. ஏ.ஏ.ஆறுமுகம், பகுதிச் செயலாளர்கள் சி.சண்முகம், பா.ஷெரீப் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.*

சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026 தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து



### அனைத்திந்திய பாட்டாளி முன்னேற்றக் கட்சி சி.என்.ராமமூர்த்தி தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்

### தலைமைக் கழக அறிவிப்பு

| தேதி | சட்டமன்ற தொகுதி |
| --- | --- |
| 13.04.2026 | மயிலாப்பூர், அம்பத்தூர் |
| 14.04.2026 | ராணிப்பேட்டை |
| 15.04.2026 | திருப்பத்தூர் |
| 16.04.2026 | தருமபுரி |
| 17.04.2026 | ஆரணி |
| 18.04.2026 | போளூர் |
| 19.04.2026 | குன்னம் |
| 20.04.2026 | திண்டுக்கல் |
| 20.04.2026 | ஆத்தூர், திண்டுக்கல் மாவட்டம். |
| 21.04.2026 | திருச்சி கிழக்கு |
| 22.04.2026 | நெய்வேலி |

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 10-04-2026.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.



ஆவடி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திருநின்றவூர் 18.19. 20 .21 .26 .27 ஆகிய வார்டுகளில் கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி நகரக் கழகச் செயலாளர் தி.வை.இரவி தலைமையில் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிரவாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாவட்ட அவைத் தலைவர் மா.ராஜி, நகர மன்ற தலைவர் உஷா ராணி ரவி, பொதுக்குழு உறுப்பினர் ஜி.விமல்வர்ஷன், நகர தேர்தல் கண்கணிப்பளர் கே.சுரேஷ் குமார். நகர நிர்வாகிகள் அன்பழகன், நாகராஜ், சி.கமலக்கண்ணன், ரவி, குணசேகரன், பி.எல்.ஆர்.யோகா, கருணாநிதி, முரளி, பாஸ்கரன், பூமணி, தி.தெ.பாபு, கிருஷ்ணன், ஜெயக்குமார், சுரேஷ், கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.




உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் க.சுந்தர் சாலவாக்கம் ஒன்றியத்தில் வாக்கு சேகரித்தார். உடன் ஒன்றிய செயலாளர் டி.குமார் உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள், ஒன்றியக் கழக நிர்வாகிகள் இருந்தனர்.



பாப்பிரெட்டிபட்டி சட்டமன்ற தொகுதி பூதநத்தம்,ஆலாபுரம்,கோபாலபுரம் உள்ளிட்ட கிராமங்களில் கழக வெற்றி வேட்பாளர் மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். உடன் தொகுதி பார்வையாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி,ஒன்றிய செயலாளர் பி.எஸ்.சரவணன்,மற்றும் கூட்டணி கட்சியினர் உள்ளனர்.